DIOCESE OF KUMBAKONAM

# NEWS LETTER

(Compiled and Edited by Diocesan News Letter Committee)

VOL. : 44 DECEMBER- 2017 No. 12



# BISHOP SPEAKS

## OUR CHOICE

Once a mother told her children, “My dear children, today is my birth day. I would like to present to you a gift. What do you want?”

The first boy aged 8 said, “I want a football.” The second one, a girl said, “I want a dancing toy.” Both of them got from their mother what they wanted. The mother asked the last one, a boy aged 4, “what do you want?”

The boy shouted, “I want neither toys nor sweets nor any other gift, **I want YOU.**” Next moment the boy was in the lap of his mother.

**Jesus is our mother.** The Lord says, “How often I have desired to gather your children as a hen gathers her brood under her wings, and you were not willing!” (Mt 23: 37b).

Actually the God who said, “Can a woman forget her nursing child, or show no compassion for the child of her womb? Even these may forget, yet I will not forget you” (Is 49:15) is going to become flesh and live among us (Jn 1:14).

**Now the question is, what we are going to ask Jesus, our mother, on his birth day?**

Let each one of us say: “Jesus, I want YOU.” When we are in the lap of Jesus, nothing devilish will overcome us (Mt 4: 1-11, Mk 1: 21-28), nothing feverish will come nearer to us (Mk 1: 29-31), all of us who carry the heavy burdens will experience rest (Mt 11: 28), all our sins will be forgiven (Mt 9: 9-13) and our love for Jesus will be celebrated (Lk 15: 11 -24).

The blessings of Jesus on the day of Christmas will depend upon the right choice we make! Let us confess: **Jesus first and the rest next.**

Wishing you a fruitful Christmas and a prosperous New Year 2018,

Yours sincerely in our Lord,

+ F. Antonisamy.

## *Bishop's Programme – December, 2017*

| | | | |
|---|---|---|---|
| 01 | Fri | 06.00 p.m. | Feast Mass: Sembodai |
| 02 | Sat | 11.00 a.m. | Blessing of the Renovated Church dedicated to St. Xavier and Confirmation Mass at Vandalai |
| | | 06.00 p.m. | Feast Mass at Kallakudi |
| 03 | Sun | 09.30a.m. | All India Catholic Union National Working Committee Meeting at Poondi Madha Retreat cum Worship Centre, Poondi |
| | | 03.30 p.m. | Annual Day: Vincent de Paul Society, Kmu<br>Mass at L.F.H.S. |
| 04 | Mon | | Visitors' Day (Diocesan Priests and Religious Priests) |
| | | 04.00 p.m. | Meeting at I.T.I, Kmu |
| 05 | Tue | | Visitors' Day (Religious Sisters and Lay People) |
| | | 05.00 p.m. | Blessing of the New Chapel dedicated to Our Lady of Good Health, Veppathur, Ammanpettai Parish |
| 06 | Wed | 10.00 a.m. | Meeting with the Provincials, Trichy |
| | | | Visit to the Mission Station: Valikandapuram |
| 07 | Thu | 05.30 p.m. | Blessing of the Shops and School Building, Musiri |
| 08 | Fri | 04.30 p.m. | Blessing of the Renovated Cathedral, Kmu |
| 09 | Sat | 10.00 a.m. | Mass at Pondicherry |
| | | 06.00 p.m. | Blessing of the Renovated Chapel dedicated to St. Antony of Paduva, Ariyalur |
| 10 | Sun | 08.00 a.m. | Mass at Cathedral, Kmu |
| | | 10.30 a.m. | SC/ ST Monitory - Committee, Kmu |
| | | 04.00 p.m. | Christmas Celebration: Tuition Centres |
| | | 06.00 p.m. | Blessing of the Bell Tower : Andimadam |
| 11 | Mon | 11.00 a.m. | Blessing of the New Houses built by Via Pacis, Italy : Vadaveekam |

| | | | |
|---|---|---|---|
| 12 | Tue | 09.30 a.m. | Senate Meeting, Kmu |
| 15 | Fri | | Mr. Arthur Peters visits the Diocese |
| 16 | Sat | | Pastoral Visit: Pudukkuppam |
| | | 04.00 p.m. | Platinum Jubilee of St. Antony's Primary School, Pudukuppam |
| 17 | Sun | 11.00 a.m. | Prison Ministry, Kum |
| | | | Pastoral Visit: Pudukkuppam |
| 18 | Mon | | Meeting the Religious Sisters |
| 20 | Wed | | Visit to Valigandapuram: Christmas Celebration |
| 24 | Sun | 11.45 p.m. | Christmas Vigil Mass: Cathedral, Kmu |
| 25 | Mon | 7.00 a.m. | Christmas Mass: Carmel Ashram, Kmu |
| 27 | Wed | 10.00 a.m. | Mass at Konalai |
| 28 | Thu | | சமாரித்தன் 2018 |
| 29 | Fri | 09.00 a.m. | Christmas Celebration by all the Commissions: Pastoral Centre, Kmu |
| 31 | Sun | 11.45 p.m. | New Year Vigil Mass: Cathedral, Kmu |

## PAPAL INTENTION FOR DECEMBER - 2017

That the elderly sustained by families and Christian communities may apply their wisdom and experience to spreading the faith and forming the new generations.



## WISH YOU A HAPPY BIRTHDAY

| | | |
|---|---|---|
| 05.12.1946 | Most Rev. F. Antonisamy | Kumbakonam |
| 05.12.1958 | Fr. A. Vincent | Susaiyapparpatinam |
| 05.12.1977 | Fr. K. Stephen Michaelraj | Singapore |
| 12.12.1960 | Fr. M. Francis | U.S.A. |
| 13.12.1938 | Fr. S. Selvaraj | Kmu |
| 13.12.1977 | Fr. J. Maria Joemicks Savio | Jayankondam |
| 15.12.1955 | Fr. C. Kulandai | Kaniyiruppu |
| 16.12.1978 | Fr. A. Benedict Dhiravyam | Tezpur |
| 17.12.1975 | Fr. V. Sahaya Christuraja | Thirumanthurai |
| 19.12.1980 | Fr. R.S. Don Bosco | Alambakkam |
| 20.12.1977 | Fr. I. Arokia Samy | Andimadam |
| 21.12.1965 | Fr. M. Kulandairaj | Poondi |
| 22.12.1982 | Fr. M. Joseph | Thiruvalenthurai |
| 25.12.1968 | Fr. G. Christuraj | I.T.I. Kmu |
| 28.12.1985 | Fr. G. Satheesh Yesudoss | Pullambadi |
| 29.12.1975 | Fr. A. Arul Irudayasamy | Germany |
| 29.12.1978 | Fr. A. Julian Antonyraj | Rome |

## ORDINATION ANNIVERSARY

| | | |
|---|---|---|
| 04.12.2000 | Fr. A. Benjamin Joseph Raj | Singapore |
| 20.12.1968 | Fr. A. Savarimuthu | Kmu |
| 20.12.1971 | Fr. A. Antoine | Mathur |
| 21.12.1969 | Fr. L. Vincent | Pullambadi |
| 22.12.1998 | Fr. A. Jeyaraj | Konnaikudi |
| 22.12.1998 | Fr. Francis M. Sebastian | Coimbatore |
| 22.12.1998 | Fr. A. Arokiasamy | Sundharaperumalkoil |
| 27.12.1980 | Fr. J. John Panneerselvam | Thirukavalur |

## NECROLOGY

| | | |
|---|---|---|
| 05.12.1984 | Rev. Maria Arokiam | Kumbakonam |
| 08.12.1999 | Msgr. S. Antonisamy | Ayyampettai |
| 09.12.1938 | Rev. M. Ignacinathar | Kumbakonam |
| 09.12.1977 | Rev. S. Abraham | Kumbakonam |
| 14.12.2009 | Rev. A. Lourdusamy | Kumbakonam |
| 15.12.1980 | Rev. Roche Manickam | Kumbakonam |
| 19.12.1968 | Rev. Augustine David | Vadugarpet |
| 26.12.1984 | Rev. A. Francis Rexis | Kovandakurichy |
| 30.12.1942 | Rev. S. Singarayar | Kumbakonam |

---

**REV. FR. A. AROCKIASAMY**

**9442883052**

**REV. FR. I. MARIA ANTONY JAMES**

**9952242556**

## FROM THE DESK OF VICAR GENERAL

Dear Bishop,

On your Birth Day, 05th December, 2017, we the Clergy, Religious and Faithful of the diocese wish you many more happy returns of the day. We offer you our sincere and prayerful wishes for your continued good health and fulfilling Episcopal ministry.

Vicar General,

Clergy and Faithful.

## SENATE MEETING

Senate meeting is going to be held on Tuesday, 12th December 2017 at 09.30 a.m. in the Bishop's House, Kumbakonam. Fathers are requested to send the points for the agenda before 10th December, 2017.

Fr. A. Roch Alexander,

Senate Secretary.

# மறைமாவட்ட மேய்ப்புப் பணி மையச் செய்திகள்

## மறைக்கல்விப் பணிக்குழு

### மறைக்கல்வி பணிக்குழு மாதாந்திர பணி அறிக்கை

நவம்பர் மாதம் 21, 22 சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரண்டு நாள்கள், மிக்கேல்பட்டி மறைவட்ட பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர், ஆசிரியைகளுக்கான ஆண்டு தியானம் பூண்டி மாதா தியான வழிபாட்டு மையத்தில் சிறப்பாக நடைபெற்றது. இத்தியானத்தை அருள்பணியாளர் பேராசிரியர் அலெக்ஸ் (பாண்டி உயர்மறைமாவட்டம்) அவர்கள் சிறப்பாக வழிநடத்தினார். இதில் மொத்தம் 160 ஆசிரியர், ஆசிரியைகள் கலந்துகொண்டார்கள்.

அருள்பணி **P.** சிங்கராயர்,
செயலர்,
மறைக்கல்விப் பணிக்குழுச் செயலர்.

## பெண்கள் பணிக்குழு

16 - 19/10/17 — இலால்குடி மறைவட்டத்தில் பயிற்சிப்பாசறை நடத்த தயாரிப்புப் பணிகள் நடைப்பெற்றது.

20-22/10/17 — டெல்லியிலிருந்து அருட்சகோதரி. தலிஷா நடுகுடியில் SD செயலர் - C.B. C. I. பெண்கள் பணிக்குழு, திருச்சி மாநில அலுவலகத்திற்கு பார்வையிட வந்திருந்தார்கள். நம் மறைமாவட்டத்திலிருந்து செயலர் மற்றும் 4 உறுப்பினர்கள் மொத்தம் ( 5) பெண்கள் 2 நாள்கள் கருத்தரங்கில் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

24-27, 31/10/17 — கோட்டப்பாளையம், முசிறி, தொட்டியம், புறத்தாக்குடி, கல்பாளையம், கொணலை, பெரம்பலூர், அன்னமங்கலம், குழுமூர், அரியலூர், நடுவலூர், கீழமிக்கேல்பட்டி பள்ளிகளில் மறைக்கல்வி - நன்னெறி ஆண்டாய்வு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| 04 - 05/11/17 | திருச்சி பிராட்டியூரில் தமிழக அளவில் நடைபெற்ற 7 - வது கருத்தாளர் தொடர் பயிற்சியில் புனல்வாசல் (3), கல்லக்குடி (2), மேலதிருப்பந்துருத்தி ( 1 ) ஆக (6) பெண்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர். |
| 13-17/11/17 | மண்டல கருத்தரங்கிற்கு தயாரிப்பு பணிகள் நடைபெற்றது. |
| 18 - 19/11/17 | திருச்சி மண்டல கருத்தரங்கு மறைமாவட்ட மேய்ப்புப் பணி மையம் தஞ்சையில் பேரருள் திரு. T. ஞானப்பிரகாசம் - முதன்மை குரு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அருட்சகோ. G. பவுலின் மேரி - செயலர் அவர்களால் பெண்களுக்கு யோகா, நுண்கலைப்பயிற்சிகள், செய்முறைப்பயிற்சி வழியாக பயிற்றுவிக்கப்பட்டது. மொத்தம் 75 பெண்கள் பங்கேற்றனர். நமது மறைமாவட்டத்திலிருந்து செயலர் மற்றும் (17) உறுப்பினர்கள் ஆக (18) பெண்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர். |

இவண்,

அருட்சகோதரி **G.** பவுலின்மேரி, **FSAG,**

பெண்கள் பணிக்குழுச் செயலர்.

## பட்டியலினத்தார் / பழங்குடியினர் பணிக்குழு

| | |
|---|---|
| 16-19/10/17 | - பெரம்பலூர் மறைமாவட்டத்தில் உள்ள பாடாலூர், சனமங்கலம், வடக்கடலூர், அத்தியர், திருமாந்துறை, கழனிவாசல், நூத்தப்பூர், நெற்குணம் காலணி, துறையூர், கிருஷ்ணாபுரம், கோட்டப்பாளையம், பி.மேட்டூர், ஆலத்துடையான்பட்டி, ஆர்.புதுப்பட்டி, முருங்கப்பட்டி, பெருமாள்பாளையம், சிக்கத்தம்பூர் பாளையம், மாராடி ஆகிய ஊர்களில் உள்ள பங்குத் தந்தை, ஊர் கிராமத் தலைவர்கள் மற்றும் ஊர் பொது மக்களை பணிக்குழுவின் செயலர் அருட்பணி அ.குழந்தை நாதன், திரு. ராஜா, திரு. வி.டி. பவுல் தனராஜ், திரு.குமார், திரு.தமிழரசன் ஆகியோர் நேரில் சந்தித்து தலித் கிறித்தவ விடுதலை ஞாயிறுக்கான அழைப்பிதழ் வழங்கினார்கள். |

| | | |
|---|---|---|
| 21/10/17 | | திருச்சி உதயதீபத்தில் நடைபெற்ற மாநில பொதுக்குழு கூட்டத்தில் செயலர் தந்தை மற்றும் திரு. மங்கலதாஸ் – கும்பகோணம், திரு. இம்மானுவேல் – கொன்னைக்குடி, திரு. ராஜசேகர் – பழமானேரி, திருமதி. ராஜகுமாரி – திருவாலந்துறை ஆகியோர் கலந்து கொண்டார்கள். |
| 22/10/17 | - | காலை 9.30 மணிக்கு கே.எம்.எஸ்.எஸ் ஹாலில் கும்பகோணம் மறைவட்டத்தைச் சேர்ந்த தலித் கிறித்தவ இளையோர்க்கான வாழ்வியல் கருத்தரங்கு நிகழ்வு நடைபெற்றது. கருத்தாளர்களான திருவாளர் முனைவர் ஜான் – துய வளனார் கல்லூரி திருச்சி, திருவாளர் மை. ஜோசப் நவநீதம் ஆசிரியர் – கும்பகோணம் ஆகியோர் சமூகத்தில் தலித் கிறித்தவ இளையோர்கள் எப்படி வாழ வேண்டும் என்பதை பல்வேறு அறிஞர்களின் வாழ்வியல் நிகழ்வுகளை சுட்டிக்காட்டி எடுத்து கூறினார்கள். இவ்வாழ்வியல் கருத்தரங்கில் 50 பேர் கலந்து கொண்டார்கள். மேலும் கும்பகோணம் மறைவட்டத்தைச் சேர்ந்த 10, 12, ஆம் வகுப்பு படிக்கும் தலித் கிறித்தவ மாணவ மாணவியர்களுக்கான வழிக்காட்டிப் பயிற்சி கருத்தரங்கு நடைபெற்றது. அருள்பணி. சுரேஷ் – தஞ்சாவூர், அவர்கள் மாணவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கான சிறப்பான கருத்துக்களை வழங்கினார். இதில் 60 பேர் பங்கேற்று பயனடைந்தார்கள். |
| 04/11/17 | | பெரம்பலூர் மறைமாவட்டத்தைச் சேர்ந்த எறையூர், திருவாலந்துறை, மறவநத்தம், தேவையூர், ஆகிய ஊர்களில் உள்ள பங்குத்தந்தை, ஊர் தலைவர்கள் மற்றும் பொதுமக்களை, பணிக்குழுவின் செயலர்,திரு.ராஜா, திரு. எடின் புரோகோமகன், வேதியர் திரு. அடைக்கல ராஜ் ஆகியோர் நேரில் சந்தித்து தலித் கிறித்தவ விடுதலை ஞாயிறுக்கான அழைப்பிதழ் வழங்கினார்கள். |

05/11/17 - பாளையம் பங்கில் உள்ள ரெங்கநாதபுரம், குரும்பளூர், சத்திரமனை, புதுநடுவலூர், எளம்பலூர் கான்வென்ட் ஆகிய ஊர்களை பணிக்குழுவின் செயலர், திரு.ராஜா, திரு. எடின் புரோகோமகன், வேதியர் திரு. அடைக்கல ராஜ் ஆகியோர் நேரில் சந்தித்து தலித் கிறித்தவ விடுதலை ஞாயிறுக்கான அழைப்பிதழ்களை வழங்கினார்கள். மேலும் அன்று 10 மணியளவில் பெரம்பலூர் மறைவட்டத்தில் உள்ள தலைவர், செயலர், பொருளர்கான கூட்டம் புனித பனிமயமாதா ஆலயத்தில் நடைபெற்றது.

09/11/17 - அன்று மாலை 6.30 மணியளவில் பெரம்பலூர் மறைவட்ட தலைவரை பணிக்குழுவின் செயலர் அ. குழந்தை நாதன், திரு.வி. பவுல் தனராஜ் சந்தித்து தலித் கிறித்தவ ஞாயிறு கொண்டாடுவதற்கு முன்னேற்பாடாக ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டது.

10/11/17 - தலித் கிறித்தவ விடுதலை ஞாயிறுக்கான தயாரிப்பு பணிகள் நடைபெற்றது.

11/11/17 - அன்று மாலை 6.30 மணிக்கு பெரம்பலூர் மறைவட்டத்தில் உள்ள முக்கிய தலைவர்கள் மற்றும் பொது மக்களை பணிக்குழுவினர் சந்தித்தனர்.

12/11/17 - அன்று மாலை 3 மணிக்கு தலித் கிறித்தவ விடுதலை ஞாயிறு பெரம்பலூர் புனித பனிமய மாதா ஆலயத்தில் சிறப்பிக்கப்பட்டது. அருள்பணி அ.குழந்தைநாதன் இக்கூட்டத்தின் நோக்கம் பற்றி எடுத்துக் கூறினார். இக்கூட்டத்திற்கு வருகை புரிந்த சிறப்பு அழைப்பாளரான டாக்டர். கு.சின்னப்பன் அவர்கள் திருச்சபையிலும் அரசாங்கத்திலும் தலித் கிறித்தவ மக்கள் படும் துன்பங்கள் பற்றி எடுத்துக் கூறி உங்களில் ஒரு தலைவனை சட்டசபை, பாராளுமன்றத்திற்கு தேர்ந்து

எடுங்கள். அப்போதுதான் நமக்கு விடுதலை கிடைக்கும் என்று கூறினார். மேலும் பேரருள் திரு . I.அடைக்கலசாமி (பெரம்பலூர் மறைவட்ட முதன்மை குரு),பேரருள்திருM.A. தனராஜ் (இலால்குடி மறைவட்ட முதன்மைகுரு),பேரருள்திரு.P.ஹென்றி புஷ்பராஜ் (புள்ளம்பாடி மறைவட்டமுதன்மைகுரு), அருள்பணி. T. சேவியர் (பெரம்பலூர் பி.எஸ்.எஸ்.எஸ் இயக்குனர்), அருட்சகோதரி G. மேரி எமரன்சியா – தலைமையாசிரியை (புனித தோமினிக் பெ.மே.நி.பள்ளி, பெரம்பலூர்), அருள்பணி A. சந்தானம் பங்குதந்தை – பாத்திமாபுரம் மற்றும் திருமதி. கிரசென்ஸியா ஆசிரியை –பெரம்பலூர் ஆகியோர் தங்களுடைய கருத்துக்களை மக்களின் மனதில் பதிவு செய்தார்கள். பேரருள் திரு. முனைவர் A.அமிர்தசாமி மறைமாவட்ட முதன்மை குரு தலைமையில் கூட்டுப் பாடல் திருப்பலி நடைபெற்றது. பேரருள்திரு.G. கோஸ்மான் ஆரோக்கியராஜ் மறையுரை (ஜெயங்கொண்டம் மறைவட்ட முதன்மை குரு) வழங்கினார். இக்கூட்டத்திற்கு வந்தவர்கள் அனைவருக்கும் வி.டி.பவுல்தனராஜ் ஆசிரியர் – குடந்தை அவர்கள் நன்றி சொன்னார். இக்கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு தந்த அருள்பணியாளர்கள், அருட்சகோதரிகள், பெரம்பலூர் மறைவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள்அனைவருக்கும் பணிக்குழுவின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இக்கூட்டத்தில் 550 பேர் பங்கேற்றார்கள்.

A. குழந்தைநாதன்,
பட்டியலினத்தார் / பழங்குடியினர்
பணிக்குழுச்செயலர்.

# இளைஞர் பணிக்குழு

| | |
|---|---|
| 22-10-2017 | பணிக்குழு நடத்திய இளைஞர்களுக்கான பயிற்சியரங்கத்தில் இளைஞர் இயக்க செயலர் 'ஒற்றுமை மற்றும் கல்வியின் அவசியம்' குறித்து கருத்துரை வழங்கினார். |
| 23, 27-10-2017 | தூய அன்னாள் மெட்ரிகுலேஷன் பள்ளியில் பயில்கின்ற மாணவிகளுக்கு கலைப்பயிற்சி கொடுக்கப்பட்டது. |
| 23,26-10-2017 | நமது புதுயுகம் கலைக்குழுவை சார்ந்த கலைஞர்கள் ஓசூர் பகுதியிலுள்ள கிராமங்களில் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்தினர். |
| 29-10-2017 | பட்டணங்குறிச்சி இளைஞர் இயக்கம் சந்திக்கப்பட்டது. |
| 03-11-2017 | வரதராஜன்பேட்டை இளைஞர் இயக்கம் சந்திக்கப்பட்டது. |
| 12-11-2017 | பூண்டி இளைஞர் இயக்கம் சந்திக்கப்பட்டது. |
| 12-11-2017 | குடந்தையில் கலைப்பயிற்சி கொடுக்கப்பட்டது. |
| 14,17-11-2017 | தர்மபுரி மாவட்டத்தில் உள்ள குக்கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்வை நமது புதுயுகம் கலைக்குழுவினர் நிகழ்த்தினர். |

இவண்,
J. பாஸ்டின் பிரிட்டோ,
இளைஞர் பணிக்குழு, கும்பகோணம்.

## குடும்ப நலப் பணிக்குழு அறிக்கை

1. நவம்பர் 04 மற்றும் 05 ஆம் தேதிகளில் குழந்தை இயேசு திருத்தலம் நம்பர்-1. டோல்கேட்டில் நடைபெற்ற கருத்தரங்கில் 30 பேர் கலந்துகொண்டு பயன் அடைந்தார்கள்.

2. நவம்பர் 18 மற்றும் 19 ஆகிய தேதிகளில் குடந்தை மறைப்பணி நிலையத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் 44 பேர் கலந்து கொண்டு பயன் அடைந்தார்கள்.

3. டிசம்பர் 2017 மற்றும் ஜனவரி 2018 இல் திருமண தயாரிப்பு பயிற்சி நடைபெறும் இடங்கள்

| வ.எண் | நாள் | இடம் |
|---|---|---|
| 1 | டிசம்பர் 02 மற்றும் 03<br>சனி மற்றும் ஞாயிறு | குழந்தை இயேசு திருத்தலம்<br>நம்பர்-1 டோல்கேட், திருச்சி |
| 2 | டிசம்பர் 16 மற்றும் 17<br>சனி மற்றும் ஞாயிறு | மறைப்பணி மையம்<br>கும்பகோணம் |
| 3 | ஜனவரி 06, 2018 மற்றும்<br>ஜனவரி 07, 2018<br>சனி மற்றும் ஞாயிறு | குழந்தை இயேசு திருத்தலம்<br>நம்பர்-1 டோல்கேட், திருச்சி |

இவண்,
J. பாஸ்டின் பிரிட்டோ,
குடும்ப நலப்பணிக்குழு,
கும்பகோணம்.

## அன்பியம், விவிலியம், திருவழிபாடு மற்றும் பொதுநிலையினர் பணிக்குழுக்கள்

04-05/11/2017 ஆகிய இரு நாள்கள் தமிழக விவிலிய பணிக்குழு சார்பாக நடைப்பெற்ற 'விவிலிய புரிதலில் குடும்பம்' என்ற தலைப்பில் நடைப்பெற்ற கருத்தரங்கில் 12 பேர் நமது மறைமாவட்டத்திலிருந்து கலந்துகொண்டனர். இந்த

நிகழ்விற்கான அனைத்து ஏற்பாடுகளையும் கும்பகோணம் விவிலியப் பணிக்குழு மேற்கொண்டது.

05-10/11/2017 ஆகிய நாள்கள் பூண்டி மாதா தியான மற்றும் வழிபாட்டு மையத்தில் நடைபெற்ற (முதல் குழு) கும்பகோணம் குருக்களுக்கான வருடாந்திர தியானத்திற்கான ஏற்பாடுகளில் திருவழிபாட்டுக் குழு சார்பாக உதவி செய்யப்பட்டது.

12-17/11/2017 ஆகிய நாள்கள் பூண்டி மாதா தியான மற்றும் வழிபாட்டு மையத்தில் நடைப்பெற்ற (இரண்டாம் குழு) கும்பகோணம் குருக்களுக்கான வருடாந்திர தியானத்திற்கான ஏற்பாடுகளில் திருவழிபாட்டுக் குழு சார்பாக உதவி செய்யப்பட்டது.

26/11/2017 கும்பகோணம் மற்றும் ஜெயங்கொண்டம் மறைவட்டங்களுக்கான விவிலியத் தேர்வுகள் நடைப்பெற்றன.

27-28/11/2017 ஆகிய இரண்டு நாள்கள் திருப்பலி உடைகள் தயாரிப்பு - தூத்துக்குடி. கீழநெடுவாய், புனல்வாசல், ஆக்னஸ்புரம் மற்றும் திருக்காவலூர் பங்குகளுக்கு தலா 10,000 வழங்கப்பட்டு பீடப்பணியாளர்கள் உடைகள் தயாரிக்க திருவழிப்பாட்டுக் குழு உதவி செய்தது. அருள்பணி. தாமஸ் சகாயராஜ் (ஜெர்மனி) அவர்களின் சீரிய முயற்சியால் நமது மறைமாவட்டத்தில் இப்பணி நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

அருள்பணி A. சிரில் ரிச்சர்ட் கிருபாகரன்,
செயலர்,
அன்பியம், விவிலியம் ,பொதுநிலையினர் மற்றும்
திருவழிபாட்டுப் பணிக்குழுக்கள்.

# நன்றியோடு...

பாசமுள்ள அருள்பணியாளர்களே, அருட்சகோதரிகளே மற்றும் இறைமக்களே உங்களின் தாராள, ஆர்வமுள்ள நன்கொடையை பேராலய புதுப்பித்தல் பணிக்காக வழங்கிய உங்களுக்கு பேராலய சார்பாக செபத்தோடு கூடிய நன்றியை மீண்டும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**அருள்பணியாளர்கள்**

| | |
|---|---|
| 1. அருள்பணி A. யூஜின் டோனி | 25000 |
| 2. அருள்பணி C. பீட்டர் பிரான்சிஸ் | 13000 |
| 3. அருள்பணி J. ரூபன் அந்தோனிராஜ் | 10500 |
| 4. அருள்பணி M. குழந்தை ராஜ் | 10000 |
| 5. அருள்பணி A. சந்தானம் | 5000 |
| 6. அருள்பணி S. டோன் போஸ்கோ | 10000 |
| 7. அருள்பணி K. இராபர்ட் | 5000 |

**பங்குத்தளங்கள்**

| | |
|---|---|
| 1. அருள்பணி பிரான்சிஸ் ரொசாரியோ (புனித சூசையப்பர் ஆலயம், திருப்பூர்) | 91150 |
| 2. அருள்பணி P. ஆரோக்கிய ராஜா (பெருமாள்பாளையம்) | 25000 |

**நிறுவனங்கள்**

| | |
|---|---|
| 1. சாந்தா மரியா கன்னியர்கள், குடந்தை | 10000 |
| 2. புனித அன்னாள் சபை புனித ஆக்னெஸ் மாநிலம், திருச்சி | 50000 |

என்றும் நன்றியுடன்,
அருள்பணி T. தேவதாஸ்,
தூய அலங்கார அன்னை பேராலயம்,
குடந்தை.

# தூய அலங்கார அன்னை பேராலயம் குடந்தை

## வரலாற்றுச் சுவடுகள்

1899 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 01 ஆம் தேதி கும்பகோணம் புதிய மறைமாவட்டமாக உருவானது. உயர்திரு. சுவாமிநாதர், அவருடைய மகன்கள் தம்புசாமி மற்றும் துரைசாமி ஆகியோரின் முழுமையான பங்களிப்போடு 1840 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இக்கோவில் மறைமாவட்ட பேராலயமாகியது. அதன்பின்பு கிறிஸ்தவ மக்களின் எண்ணிக்கை பெருகியதும் அதிக மக்கள் வழிபாடுகளில் கலந்து கொள்ள ஒரு பெரிய ஆலயம் அவசியமாயிற்று. பெரிய அளவில் ஒரு பேராலயம் இல்லையே என்கின்ற ஏக்கம் எல்லோர் மனத்திலும் இருந்து வந்தது. இந்த ஏக்கத்தைப் போக்க, மறைமாவட்டத்தின் முதல் இரண்டு ஆயர்களான மேதகு ஆயர். பொத்தேரோ அவர்களும், மேதகு ஆயர். சாப்புயி அவர்களும் பெரும் முயற்சி மேற்கொண்டு பொருளுதவி திரட்டினார்கள். 1924 ஆம் ஆண்டு ஆயர் சாப்புயி அவர்களின் காலத்தில் அப்போதைய பேராலய பங்குத்தந்தை அருள்பணி புரூனியர் அவர்களால் இப்பேராலயத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு கட்டுமானப் பணிகள் தொடங்கியது. இதற்கிடையில் 1930 ஆம் ஆண்டு அருள்பணி புரூனியர் அவர்கள் சேலம் மறைமாவட்ட ஆயராக பொறுப்பேற்றதால் பேராலய கட்டுமானப் பணிகள் தடைபட்டது.

1930 ஆம் ஆண்டு மே 27 ஆம் தேதி பேரருள்திரு சேவியர் அடிகளார் மறைமாவட்ட பரிபாலகராகப் பொறுப்பேற்றதும் பேரலாய கட்டுமானப் பணிகள் மீண்டும் தொடங்கின. பேராலயத்தை அழகூட்டுவதற்காக சித்திர வேலைபாடுகள் கொண்ட பல கலைபொருள்கள் பிரான்ஸ் நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டது. 1931 ஆம் ஆண்டு மேதகு ஆயர். பீட்டர் பிரான்சிஸ் மறைமாவட்டதின் முதல் இந்திய ஆயராக பொறுப்பேற்றார்.

அவரது அயராத உழைப்பாலும் தொடர் முயற்சியாலும் பேராலயக் கட்டுமானப்பணி இனிதே நிறைவுற்று 08-12-1936 இல் தூய அமல உற்பவ அன்னை பெருவிழா நாளன்று ஆயிரக்கணக்கான இறைமக்களின்

முன்னிலையில் மேதகு ஆயர். பீட்டர் பிரான்சிஸ் அவர்களால் அருள்பொழிவு செய்யப்பட்டது. மேதகு ஆயர். பவுல் அருள்சாமி காலத்தில் உரிய முக்கியத்துவம் கொடுத்து இப்பேராலயம் பராமரிக்கப்பட்டது. 1999 ஆம் ஆண்டு மேதகு ஆயர். பீட்டர் ரெமிஜியுஸ் காலத்தில் மறைமாவட்ட நூற்றாண்டு விழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

பேரருள்திரு A.R. சின்னப்பன் அவர்கள் காலத்தில் காலத்திற்கேற்ற பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பங்குத்தந்தை பேரருள்திரு. A.அந்துவான் அடிகளாரின் பெரும்முயற்சியால் பேராலயத்தின் பீடம் அழகுற வடிவமைக்கப்பட்டது. அதன்பின் தற்போதைய ஆயர் F. அந்தோனிசாமி காலத்தில் அவருடைய வழிகாட்டுதலில் பேராலயத்தில் பணியாற்றிய பேரருள்திரு T.ஜோசப் தேவைக்கேற்ற பணிகளை மேற்கொண்டார். குறிப்பாக பேரருள்திரு A.மார்ட்டின் தே போரஸ் அடிகளாரின் முயற்சியால் பேராலயத்தின் முன்புறம் நற்கருணை ஆலயமும் பேராலயத்தை சுற்றிலும் சிமெண்ட் சாலையும் திருச்சிலுவைப் பாதை நிலைகளும் அமைக்கப்பட்டன.

இவைகளின் முத்தாய்ப்பாக தற்போது மேதகுஆயர் F. அந்தோனிசாமி அவர்களின் ஆசியாலும் பேராலய பங்குத்தந்தை பேரருள்திரு T. தேவதாஸ் அடிகளாரின் அயராத உழைப்பாலும் பேராலய பங்குமக்களின் தாராள உதவியாலும் மறைமாவட்ட இறைமக்களின் பொருளுதவியாலும் இப்பேராலயம் பழைமை மாறாமல் புதுப்பொலிவுடன் புதுப்பிக்கப்பட்டு டிசம்பர் மாதம் 08 ஆம் தேதி 2017 வெள்ளிக்கிழமை மாலை தூய அமல உற்பவ அன்னையின் பெருவிழா நாளன்று மேதகு பேராயர் அந்தோனிசாமி ஆனந்தராயர், பாண்டி - கடலூர் உயர் மறைமாவட்டம், மேதகு ஆயர் F.அந்தோனிசாமி, கும்பகோணம், மேதகு ஆயர் M.தேவதாஸ் அம்புரோஸ், தஞ்சாவூர், மேதகு ஆயர் S.சிங்கராயன், சேலம் இவர்களின் முன்னிலையில் முன்னாள் கும்பகோணம், கோட்டாறு மேதகு ஆயர் பீட்டர் ரெமிஜியுஸ் அவர்களால் அருள்பொழிவு செய்யப்படவுள்ளது.

சிற்ப வேலைப்பாடுகள் செறிந்த கோயில் நகரம் என அழைக்கப்படும் குடந்தை மாநகரில் நமது பேராலயமும் தனிப்பெரும் சிறப்புடன் இறைப்புகழை பாடி எழிலுற அமைந்துள்ளது நம் எல்லோருக்கும் பெருமை ஆகும். அன்னையிடம் வாருங்கள்! இறையருளை பெற்றுச் செல்லுங்கள்!

# BISHOP'S FUND FOR EDUCATION
# MONTH OF NOVEMBER – 2017

| S. No. | Particulars | Parishes | Amount |
|---|---|---|---|
| 1. | Rev. Fr. A. Benedict Prabaharan | Italy | 28000 |
| 2. | Parish Priest | Punalvasal | 3000 |
| 3. | Parish priest | Keelamichaelpatti | 5000 |
| 4. | Parishioners | Keelamichaelpatti | 10300 |
| 5. | Parish Priest | Samayapuram | 7500 |
| 6. | St. Leonardi Mat. School | Samayapuram | 5000 |
| 7. | Parishioners | Samayapuram | 9600 |
| | | **Total** | **68400** |

## BALANCE SHEET

| S. No. | Particulars | Payments | Receipts |
|---|---|---|---|
| 1 | Balance on 30.11.2017 | | 2,66,268.00 |
| 2 | Month of November - 2017 | | 68,400.00 |
| | Total | | 3,34,668.00 |

E.&O.E.

Rev. Fr. M. Philip Santiagu,
Procurator.

# KUMBAKONAM DIOCESE NEWS LETTER
## IMPORTANT EVENTS





Annual Retreat : Batch I Annual Retreat : Batch II
Poondi Madha Retreat Cum Worship Centre, Poondi



Pastoral Visit : Samayapuram



Silver Jubilee Celebration : Fr. M. Kulandairaj

Bishop's House, Post Box No. 3, Kumbakonam - 612 001.
E-mail: kumbakonamdiocese@gmail.com
Webpage : www.dioceseofkumbakonam.org.

Udaya Offset Printers - Kmu. Cell : 94436 51112